1972 ஆகஸ்ட் 18]

கிறார்கள். இதை மாற்றியமைத்து ஒரே சீராகக் கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, லாரிகளைப் பொறுத்தவரையில், எந்தெந்த இடங்களுக்குச் செல்கின்றன, என்னென்ன பொருள்களை ஏற்றிச் செல்கின்றன என்பதைப் பொறுத்து பல்வேறு விகிதங்களில் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகவே, ஒரே சீரான கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பது மிகவும் கடினமான காரியம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, பெரிய பஸ் கம்பெனிகளை எல்லாம் தேசியமயமாக்கி வருகிறோம். இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குள் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்கி விடுவோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். ஆகையால், இந்த லாரிகளையும்—முதலில் பெரிய லாரி கம்பெனிகளையும் பின்பு படிப்படியாக சிறிய லாரி கம்பெனிகளையும் தேசியமயமாக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பஸ் களையே இன்னும் முழுவதுமாகத் தேசியமயமாக்கவில்லை. முதலில் இந்த வேலை முடிந்த பின்னால் லாரிகளைத் தேசியமயமாக்குவது பற்றி யோசிக்கலாம்.

Murugan temple in Vadakku Tiruchitrambalam

* 175 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a number of idols of the Muruga Temple at Vadakku Tiruchitrambalam village near Madurantakam were damaged in May 1972; and

(*b*) If so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகரின் வட பகுதியில் உள்ள வட திருச்சிற்றம்பலம், ஸ்ரீ ஆறுமுகர் ஆலயத் திலுள்ள நவக்கிரக சிலைகள் 29-4-1972 தேதி மாலை மதுராந்தகம் குப்புராஜ் என்பவரால் குடிவெறியில் கற்களால் தாக்கப் பட்டுள்ளது. அந்நபர்மீது இ.பி.கோ. 295 மற்றும் 297 பிரிவுகளின்

கீழ் வழக்குத் தொடர்ந்து நிலுவையில் உள்ளது. மேற்படி ஆலயத்திற்குப் புதிதாக நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக இதுவரை ரூ. 500 நன்கொடை சேர்ந்துள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, குடிவெறியன் கோவில் சிலைகளைச் சேதப்படுத்தும்வரை கோவிலில் இருந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள்? அப்படிப்பட்ட அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா? மேலும் இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அறநிலையத் துறை என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அறநிலையத்துறை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, சேதமுற்ற கோயில் அறநிலையத்துறையைச் சேர்ந்தது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கைகள் அளித்தல்.

(அ) கடையநல்லூர் இரயில் நிலையத்தில் இரு இரயில் வண்டிகள் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 82-வது விதியின்கீழ் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையொன்றை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 16-8-72 புதன்கிழமை அதிகாலை 2 மணி அளவில் தென் பிராந்திய ரயில்வேயில் விருதுநகர்-தென்காசி மீட்டர்கேஜ் இருப்புப் பாதையிலுள்ள கடையநல்லூர் இரயில் நிலையத்தில் திருவனந்தபுரம்-சென்னை விரைவு இரயில் வண்டியும், சென்னை-திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் மோதிக்கொண்டன என்ற தகவலைக் கேட்டு வருத்தத்தில் ஆழ்ந்துள்ளோம். இந்த விபத்தின் காரணமாக 6 பேர் கடுமையான காயமடைந்தனர்; 4 பேர் சிறு காயமடைந்